# நீ என்னை மகிமைப்படுத்துவாய். சங் 50 : 15

**ஆபத்து காலத்தில் அனுகூலமான துணை**

எந்தக்காலத்திலும், எந்த நேரத்திலும்,
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்,
இயேசுவே உம்மை நான் துதிப்பேன், துதிப்பேன்,
எந்த வேளையிலும் துதிப்பேன்.

**சங்கீதம் 46 : 1 ஐ இந்த மாதம் அடிக்கடி**

அவர் செய்த அதிசயங்களை நினைவு கூருங்கள். அப்பொழுது தேவனை மகிமைப்படுத்துவீர்கள்.

**சங்கீதம் 46 : 1 :** தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்

**ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணை**

ஆம் பிரியமானவர்களே,
ஆபத்துக்காலத்திலே நம்முடைய தேவன் நமக்கு அனுகூலமான துணை ஆக இருக்கிறார்.
ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் சகோதரியே, சகோதரனே,
தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பாயா ? **அனுகூலமான துணை உனக்குண்டு**
நீ இயேசுவை மகிமைப்படுத்துவாயா ? ஆம், நிச்சயமாகவே மகிமைப்படுத்துவாய்.

**ஏனெனில் இந்த மாத வாக்குத்தத்தம் கூறுகிறது. நீ என்னை மகிமைப்படுத்துவாய் – என்பதாக.**

தேவனை மகிமைப்படுத்தவே உன்னை அழைத்திருக்கிறார். கர்த்தரின் மகிமையைப் பாடுங்கள்.
எனக்கு ஏன் இந்த பாடுகள் என அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரியே, சகோதரனே,
நீ தேவனை மகிமைப்படுத்தவே அழைக்கப்பட்டிருக்கிறாய்.
பின்பு ஏன் ? நீ உலக வேலையில் சிக்கிக்கொண்டிருக்கிறாய்.
ஏன் தினமும் கண்ணீர் வடிக்கிறாய் ?
ஏன் புலம்பிக்கொண்டிருக்கிறாய் ?
ஏன் தேவனிடத்தில் முனுமுனுக்கிறாய் ?
ஏன் தேவனிடத்தில் முறையிடுகிறாய்.
நீ இருக்கவேண்டிய ஸ்தானம் இதுவல்ல. நீ செய்யவேண்டிய வேலை இது அல்ல.
தேவன் உன்னை மேன்மையான பணிக்கு அழைத்திருக்கிறார்.

**தூசியை உதறிவிட்டு எழுந்திரு, எழும்பி பிரகாசி, உன் ஒளி வந்தது.**
**கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.**

**சங்கீதம் 29 : 1 :** கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள். கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்

**நீ என்னை மகிமைப்படுத்துவாய்.**

என் அன்பு சகோதரனே, சகோதரியே,
இந்த மாதம் கீழ்க்கண்டவாறு அடிக்கடி உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.

**நான் இயேசுவை மகிமைப்படுத்துவேன். நான் இயேசுவை மகிமைப்படுத்துவேன்.**
**நான் இயேசுவை மகிமைப்படுத்துவேன்.**

தேவன் எனக்கு அடைக்கலமும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர். கேட்டதை எல்லாம் கர்த்தர் தருகிறார் என்று சாட்சி பகரும் சகோதரியே, சகோதரனே,

**நீயும் அவரை மகிமைப்படுத்தவேண்டும்.**
**ஏசாயா 49 : 3 கூறுகிறது.**
**நீ என் தாசன், இஸ்ரவேலை நான் உன்னில் மகிமைப்படுவேன்.**
**நீ என்னை மகிமைப்படுத்துவாய். – ஆமென்.**

இயேசு கிறிஸ்து எப்பொழுதும், பிதாவையே மகிமைப்படுத்திக் கொண்டிருந்தார். ஆதலால், பரத்திலிருந்து ஒரு சத்தம் வந்தது, இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்.
என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,
நீ இயேசுவை மகிமைப்படுத்தும்பொழுது, **அவர் உன்னை மகிமைப்படுத்துவார்.**